# SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA

## THIRD YEAR EXAMINATIONS IN BACHELOR OF ARTS (EXTERNAL) – 2007 / 2008
## HELD IN AUGUST – 2008

## ECS 3.12 – SRI LANKAN ECONOMY

**எவையேனும் ஐந்து (05) வினாக்களுக்கு விடை தருக.**

**நேரம் : 03 மணித்தியாலங்கள்**

---

01. சுதந்திரத்துக்குப் பின்னர் இலங்கையின் தேயிலைப் பெருந்தோட்டத் துறையின் முகாமைத்துவத்தில் ஏற்பட்ட மாற்றங்களை விளக்கி, அம்மாற்றங்கள் இலங்கையின் பொருளாதார வளர்ச்சியில் எத்தகைய விளைவுகளை ஏற்படுத்தியுள்ளன என்பதை ஆராய்க.

(20 புள்ளிகள்)

02. (அ) இறக்குமதிப் பதிலீட்டுக் கைத்தொழில் கொள்கை, ஏற்றுமதி நோக்கிய கைத்தொழில் கொள்கை என்பவற்றின் பிரதான பண்புகளைப் பட்டியலிடுக.

(06 புள்ளிகள்)

(ஆ) சுதந்திரத்துக்குப் பின் இலங்கையில் இறக்குமதிப் பதிலீட்டுக் கைத்தொழில் கொள்கை, ஏற்றுமதி நோக்கிய கைத்தொழில் கொள்கை என்பவற்றின் சாத்தியப்பாட்டினை பரிசீலனை செய்க.

(14 புள்ளிகள்)

03. (அ) வறுமை குறைப்பு, வறுமை ஒழிப்பு என்னும் பதங்களை வேறுபடுத்துக.

(06 புள்ளிகள்)

(ஆ) வறுமை ஒழிப்பு நிகழ்ச்சித் திட்டங்கள் என்ற வகையில் இலங்கையில் அமுல் நடாத்தப்பட்ட ஜனசவிய நிகழ்ச்சித் திட்டம் சமுர்த்தி நிகழ்ச்சித் திட்டம் என்பவற்றை வேறுபடுத்தி விளக்குக.

(08 புள்ளிகள்)

(இ) வறியவர்கள் பெருமளவுக்கு ஈடுபட்டுவரும் பொருளாதார நடவடிக்கையாக முறைசாராத் துறையை நீர் கருதுவீரா? உமது விடையை நியாயப்படுத்துக.

(08 புள்ளிகள்)

04. (அ) கீழுழைப்பு, வேலையின்மை என்ற பதங்களை வேறுபடுத்துக.

(06 புள்ளிகள்)

(ஆ) இலங்கையின் அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டு உயர்கல்விக்கு மானியம் வழங்குவதற்குரிய அடிப்படை நியாயங்களை வேலையின்மையுடன் தொடர்புடுத்தி விளக்குக.

(14 புள்ளிகள்)

05. “உலகமயமாதல் அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளை சர்வதேச ரீதியான தங்கியிருத்தலுக்கு இட்டுச் செல்கின்றது”. இலங்கையின் கடந்தகால அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டு இக்கூற்றை விளக்குக.

(20 புள்ளிகள்)

06. “இலங்கையில் அமுல் நடாத்தப்படும் பொருளாதாரக் கொள்கைகள் மாறி மாறி ஆட்சிக்கு வந்த அரசுகளின் அழுத்தத்துக்குட்பட்டு வந்துள்ளன”. 1977 ஆம் ஆண்டுக்குப் பின்னர் ஆட்சி அமைத்த அரசாங்கங்களின் அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டு இக்கூற்றை பரிசீலனை செய்க.

(20 புள்ளிகள்)

07. (அ) பொருளாதார உட்கட்டமைப்பு, மானிட உட்கட்டமைப்பு என்னும் பதங்களை வேறுபடுத்துக.

(06 புள்ளிகள்)

(ஆ) எந்தவொரு பொருளாதாரத்திலும் மானிட உட்கட்டமைப்பு வசதிகளை நிர்ணயிக்கும் காரணிகளை விளக்குக.

(07 புள்ளிகள்)

(இ) இலங்கையின் பொருளாதார வளர்ச்சியில் மானிட உட்கட்டமைப்பு வசதிகளின் முக்கியத்துவத்தையும் அதன் தற்போதைய நிலைமையையும் விளக்குக.

(07 புள்ளிகள்)

08. பின்வருவனவற்றில் **மூன்றிற்கு** (03) விளக்கக் குறிப்புக்கள் எழுதுக.

(அ) இலங்கையின் இரட்டைப் பொருளாதாரமும் அந்நியர் ஆட்சியும்.

(ஆ) இலங்கையின் அரச துறைகளில் ஊழிர்யர்களின் வருமானமும், அவர்களது எல்லை உற்பத்தியும்.

(இ) மூளைசாலிகள் வெளியேற்றமும், இலங்கைப் பொருளாதாரமும்.

(ஈ) பணவீக்கமும் நிலையான வருமானம் பெறுவோரின் வாழ்க்கைத் தரமும்.

(20 புள்ளிகள்)

*****